JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW- 3 Witness for Prosecution

STC No. 324/2024 Crime No. Station Appakodal PS

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-3-ஜான் ராஜ் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of August 2025 | | | |

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் நல்லிக்கவுண்டன்புதூர், அம்மன் நகரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 29.12 .2023 ஆம் தேதியன்று இரவு சுமார் 7:30 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் நல்லிக்கவுண்டன் புதூர், அம்மன் நகர் ஐயர் வீட்டுக்கு அருகில் பவானி - சக்தி மெயின் ரோட்டில் வந்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி இந்த விபத்தில் அடிபட்ட ராஜேஷ் என்பவர் அவரது பைக்கில் ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டு இருந்தபோது எதிர் திசையில் வேகமாக வந்த கார் ராஜேஷின் பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. விபத்தை நேரில் பார்த்த நான் அருகில் சென்று பார்த்தபோது ராஜேஷுக்கு முழங்கையிலும் மற்றும் காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் காயம்பட்ட ராஜேஷை பைக் மூலமாக ஆப்பக்கூடல் VMK மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்/ அங்கு சிகிச்சை பெற்று விட்டு ராஜேஷ் வீட்டுக்கு சென்று விட்டார். பின்னர் மறுநாள் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக தங்கியிருந்து ராஜேஷ் சிகிச்சை பெற்றுக் கொண்டார். மேற்படி காரை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபரை நான் விபத்து ஏற்பட்டபொழுது சரியாக பார்க்கவில்லை. அதனால் தற்போது அவரை என்னால் அடையாளம் காட்ட இயலாது. விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் அடிபட்ட நபர் எனக்கு தெரிந்த நபர் என்றால். சரியல்ல. விபத்து நடந்து

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.25 07:22:38 +0530

அடிபட்ட நபர் கீழே விழுந்து பின்பு தான் நான் சம்பவத்தை பார்த்தேன் என்றால். சரிதான். யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என என்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றால் சரிதான். எனக்கு தெரியாது என்றால், சரிதான்.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.25 07:22:45 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.